இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 326 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 22 – ஞாயிற்றுக்கிழமை 06 ஜூலை 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 326 : Thiruvalluvar Year - 2056 - Aani 22 - Sunday 06 July 2025 - Chennai 16 Pages ₹ 5.00


## “உடன்பிறப்பே வா!” கழக நிர்வாகிகளுடன் முதல்வர் –

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாடல்!

## தொகுதி நிலவரங்கள் குறித்து கேட்டறிந்தார்!



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.7.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்துப் பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகம் வழங்கினார்.

**சென்னை, ஜூலை 6 -**

**“உடன்பிறப்பே வா” - எனும் இலட்சிய முழக்கத்துடன், கழக நிர்வாகிகளுடன் முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாடி வருகிறார்.**

கட்சியின் ஆக்கப்பணிகள், தேர்தல் செயல் திட்டங்கள் குறித்து தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனித்தனியாகச் சந்தித்து ஆலோசனை நடத்துகிறார்.

அதன் விவரம் வருமாறு:-

“ஓரணியில் தமிழ்நாட்டை ஒருங்கிணைப்பதில் கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவரும் தங்களை இணைத்துக் கொண்டு, புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதிலும், கழக அரசின் சாதனைத் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வதிலும், 2026-இல் மீண்டும் கழக ஆட்சியை அமைப்பதிலும் முனைப்புடன் செயலாற்ற வேண்டும் என ‘உங்களில் ஒருவன்’ என்ற முறையில் அன்பு கலந்த உரிமையுடன் வலியுறுத்துகிறேன்.

தொண்டர்களையும் பொது மக்களையும் அரவணைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாதை தெளிவானது! பயணம் உறுதிமிக்கது! இடையூறுகள் - அவதூறுகள் எதுவாக இருந்தாலும் அவற்றை முறியடித்து கடக்கும் வலிமை கொண்டது. பெருமைமிக்க கழகத்தின் உடன்பிறப்பே வா! உன்னால் உருவாகும் ‘ஓரணியில் தமிழ்நாடு!’”

என்று கழகத்தவர்க்கு அன்பழைப்பு விடுத்த முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,

‘உடன்பிறப்பே வா’ எனும் தலைப்பில் தொகுதி வாரியாக தி.மு.க. நிர்வாகிகளை, தனித்தனியாகச் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

இந்தச் சந்திப்பின்போது, கட்சியின் ஆக்கப் பணிகள், தேர்தல் செயல் திட்டங்கள் குறித்து தி.மு.க. நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்துகிறார்.

மூன்று தொகுதிகளைச் சேர்ந்த கட்சியின் நிர்வாகிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று ஆலோசனை மேற்கொண்டார். சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், மூன்று தொகுதிகளைச் சேர்ந்த ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் பங்கேற்றனர்.

அப்போது “ஓரணியில் தமிழ்நாடு” முன்னெடுப்பில் பூத் அளவிலான உறுப்பினர் சேர்க்கை குறித்தும் முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்.

தொகுதிகளின் புள்ளி விவரங்களை கையில் வைத்துக் கொண்டு ஒன்றியச் செயலாளர்களிடம் ஒவ்வொரு வாக்குச்சாவடி யிலும் சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் குறித்த விவரங்களையும் முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டு வருகிறார்.

---

### 42 நாடுகளுக்குச் சென்றுள்ள

## பிரதமர் மோடி, இன்னும் மணிப்பூர் செல்லாதது ஏன்?

### காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கேள்வி!

ஐதராபாத், ஜூலை 6 -

42 நாடுகளுக்குச் சென்றுள்ள பிரதமர் மோடி, இன்னும் மணிப்பூருக்கு செல்லாதது ஏன் என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐதராபாத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மல்லிகார்ஜுன கார்கே கலந்து கொண்டார்.

அப்போது பேசிய அவர், பிரதமர் மோடி, உலகில் உள்ள 42 நாடுகளுக்குச் சென்றுள்ளார்.



ஆனால் கலவரத்தால் பதிக்கப்பட்ட மணிப்பூருக்கு இதுவரை செல்லவில்லை என குற்றம் சாட்டினார்.

மணிப்பூரில் மக்கள் மடிந்துகொண்டிருப்பதாகக் கூறிய அவர், பிரதமருக்கு யாராவது ஒரு தொப்பியும், பதக்கமும் கொடுத்தால், அதை அணிந்து கொண்டு எங்கு வேண்டுமானாலும் செல்வார் என விமர்சித்த கார்கே,

மோடியின் வெளியுறவு கொள்கை தவறாக உள்ளதால், அனைத்து பகுதிகளிலும் நமக்கு எதிரிகள் உருவாகி விட்டனர் என்றும், ஒருபுறம் சீனா, மறுபுறம் பாகிஸ்தான் இருக்கும் நிலையில், நேபாளம் கூட நம்மிடம் இருந்து விலகி விட்டதாகவும் அண்டை நாடுகள் நம்மை விட்டு சென்று கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

பிரதமர் மோடியின் 11 ஆண்டுகால ஆட்சி, பொருளாதாரத்தை அழித்து விட்டதுடன், அரசியல் சாசனத்தையும் அழித்து விட்டதாகவும் மல்லிகார்ஜுன கார்கே குற்றம்சாட்டினார்.

---

### அதிபர் ட்ரம்ப்பின் நிபந்தனைகளுக்கு பிரதமர் மோடி பணிந்துவிடுவார்!

## ஒன்றிய அமைச்சர் பியூஸ் கோயலுக்கு - எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி பதிலடி!

வாஷிங்டன், ஜூலை 6 -

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விதித்த காலக் கெடுவை பிரதமர் மோடி ஏற்றுக்கொள்வார் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் மிகப் பெரிய வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்திட இருப்பதாக, அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறியிருந்தார். ஆனால், இரு நாடுகள் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாவதில்



தொடர்ந்து இழுபறி நீடித்து வருகிறது. அந்நிய முதலீடுகளை அனுமதிக்காமல் நீண்டகாலமாக பாதுகாக்கப்பட்டு வரும் விவசாயம், பால்வளம் ஆகியவற்றில் சந்தையை திறந்து விடுமாறு அமெரிக்கா கோரி வருகிறது.

இந்நிலையில், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பெரிய வர்த்தக ஒப்பந்தத்தை முடிவு செய்ய வேண்டும் என்ற அவசரத்தில் இந்தியா செயல்படவில்லை என்று ஒன்றிய அமைச்சர் பியூஸ் கோயல் கூறியிருந்தார்.

இருநாடுகளும் பயன் பெறும் வகையில் முடிவுகள் இருந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்வோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில்,

ஒன்றிய அமைச்சர் பியூஸ் கோயல் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். எனது வார்த்தைகளை கவனியுங்கள். “ட்ரம்ப் விதித்த காலக் கெடுவை பிரதமர் மோடி ஏற்றுக்கொள்வார்” என்று ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

---

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சாதனை!

### ஒரே ஆண்டில் 17 ஆயிரத்து 702 பேருக்கு வேலை வழங்கியது!

சென்னை, ஜூலை 6 -

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் செயலாளர் கோபால சுந்தரராஜ் வெளியிட்ட செய்திக்குறிப்பில், அரசு பணியை எதிர்நோக்கி இருக்கும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் விதமாக, டி.என்.பி.எஸ்.சி. மூலம் 17 ஆயிரத்து 595 காலிப் பணியிடங்கள் 2026 ஜனவரி மாதத்திற்குள் நிரப்பப்படும் என்று தமிழக அரசு கடந்த ஆண்டு ஜூன் மாதம் அறிவித்தது.

தேர்வர்களின் நலன் கருதி, டி.என்.பி.எஸ்.சி., தேர்வு பணிகளை துரிதப் படுத்தி, கடந்த 2024 ஜூன் முதல் நடப்பாண்டு ஜூன் மாதம் வரையில் பல்வேறு அரசு துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப 17 ஆயிரத்து 702 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2026 ஜனவரி மாதம் வரை நிர்ணயித்த இலக்கை டி.என்.பி.எஸ்.சி. 7 மாதங்களுக்கு முன்பாகவே எட்டியுள்ளது.

மேலும், தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு கூடுதலாக 2 ஆயிரத்து 500க்கும் அதிகமான காலி ப்பணியிடங்களை நிரப்ப தேர்வு பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### ககன்யான் திட்டத்தின்

## 4ஆம் கட்ட சோதனை வெற்றி!

### இஸ்ரோ தகவல்!

நெல்லை, ஜூலை 6 –

நெல்லை மகேந்திரகிரி இஸ்ரோ மையத்தில் மனிதனை விண்ணிற்கு அனுப்பும் ககன்யான் திட்டத்திற்கு 130 வினாடிகள் நடைபெற்ற எஸ்.எம்.எஸ்.டி.எம் மாடுல் என்ஜினின் 4ம் கட்ட சோதனை வெற்றிபெற்றதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், பனகுடி அருகே உள்ள காவல்கிணறு கிராமத்தில் மகேந்திரகிரி மலை உள்ளது. இந்த மலையின் அடிவாரத்தில் மகேந்திரகிரி இஸ்ரோ மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு ராக்கெட்டுகளுக்கான கிரையோ ஜெனிக் என்ஜின், விகாஸ் என்ஜின் மற்றும் பி.எஸ்.4 என்ஜின் போன்றவற்றைத் தயாரித்து பரிசோதிக்கிறார்கள்.

மேலும் இந்த மையத்திலிருந்து விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தின் விண்ணில் செலுத்தப்பட இருக்கும் இஞ்சின்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், மகேந்திரகிரி இஸ்ரோ மையத்தில் ககன்யான் திட்டத்தின் எஞ்சினின் 4ம் கட்ட சோதனை வெற்றி பெற்றதாக இஸ்ரோ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

SMSDM என்ற மாடலிங் எஞ்சினின் 4ம் கட்ட சோதனை நிர்ணயிக்கப்பட்ட இலக்கை வெற்றிகரமாக அடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். இதனால் இஸ்ரோ விஞ்ஞானிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

